இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 26-10-2024

# பழனிசாமிக்குத்தான் புகைச்சல்

தி.மு.க. கூட்டணி வலிமையாக - உறுதியாக இருப்பதை காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழகத்தின் பவளவிழாப் பொதுக்கூட்டத்தின் மூலமாக அனைத்துத் தலைவர்களும் உறுதிப்படுத்தி விட்டார்கள். இதன் மூலமாக பழனிசாமிக்குத் தான் புகைச்சல் அதிகமாகி வருகிறது. பாவம், தூக்கமில்லாமல் தவிக்கிறார்.

“தி.மு.க. கூட்டணிக்குள் புகைச்சல் தொடங்கி விட்டது” என்று புலம்பி இருக்கிறார் பழனிசாமி. தனது ஆளுகைக்கு அ.தி.மு.க. வந்தது முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் தோற்று மண்ணைக் கவ்வியவர் பழனிசாமி. அந்த தோல்விக் காய்ச்சலில் இருந்து அவர் இன்னமும் மீளவில்லை. அந்த பிதற்றலைத்தான் தினமும் நாம் கேட்டு வருகிறோம்.

**ஜெயலலிதா மறையும் போது இவரிடம் ஆட்சி இருந்தது. இப்போது ஆட்சி இருக்கிறதா? இல்லை. ஜெயலலிதா இவரிடம் அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளையும் கொடுத்துச் சென்றார். இப்போது ஒரு நாடாளுமன்றத் தொகுதியாவது இருக்கிறதா? அதுவும் இல்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதியிலும் தோற்றவர்தான் பழனிசாமி. 7 தொகுதியில் டெபாசிட் போய்விட்டது. 12 தொகுதியில் மூன்றாவது இடத்துக்கு பழனிசாமியின் கட்சி போனது. கன்னியாகுமரி தொகுதியில் நான்காவது இடம் போனது பழனிசாமியின் கட்சி. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை 234 சட்டமன்றத் தொகுதி வாரியாக பகுத்துப் பார்த்தால் 222 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. இப்படி அ.தி.மு.க.வின் செல்வாக்கை மொத்தமாகச் சரித்த சாதனைக்குச் சொந்தக்காரர்தான் பழனிசாமி.**

அ.தி.மு.க.வையாவது முழுமையாக வைத்திருக்கிறாரா என்றால் இல்லை. பன்னீர்செல்வம் ஒரு அணியை வைத்துள்ளார். தினகரன் ஒரு கட்சியைத் தொடங்கிவிட்டார். அ.தி.மு.க.வுக்கு நான்தான் பொதுச்செயலாளர் என்று சசிகலா சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்பத்தில் பாதியைத்தான் பழனிசாமி வைத்துள்ளார். அவர் வைத்துள்ளது, அரைகுறை அ.தி.மு.க. தானே தவிர, முழுமையான அ.தி.மு.க. அல்ல.

கூட்டணி என்று இருந்தார்களே, அவர்களையாவது ஒழுங்காக வைத்துக் கொண்டாரா பழனிசாமி என்றால் இல்லை. அண்ணாமலைக்கும் பழனிசாமிக்கும் ஏரியாவைப் பிரிப்பதில் சண்டை ‘கடப்பா உன்னிது ரேணிகுண்டா என்னிது’ என்பதைப் போல மேற்கு மண்டலத்தில் யாருக்குச் செல்வாக்கு அதிகம் என்ற சண்டையில் மோதி மோதி மண்டை உடைந்ததுதான் மிச்சம்.

2021 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இருந்தது. ஏன் உடைந்தது?

1991-96 ஆண்டுகளில் தமிழ்நாட்டை ஆட்சி செய்தவர் ஜெயலலிதா. அவரது ஆட்சிக்காலம் ஊழலில் மிக மோசமான காலக்கட்டமாக இருந்ததா என்று ஒரு ஆங்கிலப் பத்திரிக்கை கேட்கிறது. அப்போது அண்ணாமலை, “தமிழகத்தில் பல நிர்வாகங்கள் ஊழல் மலிந்தன. முன்னாள் முதல்வர்கள் நீதிமன்றங்களில் தண்டனை பெற்றுள்ளனர். அதனால்தான் தமிழகம் ஊழல் மிகுந்த மாநிலமாக மாறியுள்ளது. ஊழலில் நம்பர் ஒன் என்று சொல்வேன்,” என்றார்.

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று சிறைக்குப் போனவர் - பதவியை இழந்தவர் ஜெயலலிதா மட்டும்தான். அவரது பெயரைச் சொல்லாமல் சொல்லி இருந்தார் அண்ணாமலை. கூட்டணியில் இருக்கும் போதுதான் அண்ணாமலை இப்படி பேட்டி அளித்தார். இந்தப் பேட்டிக்கு எதிராக அ.தி.மு.க. கொந்தளித்தது. அ.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் போடப்பட்டது.

“ஆங்கில நாளிதழுக்குப் பேட்டி அளித்த அண்ணாமலை, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பற்றி அவதூறாகவும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் பேட்டி அளித்துள்ளார். இது அ.தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. 20 ஆண்டுகளாக சட்டசபையில் பிரதிநிதித்துவம் இல்லாத பா.ஜ.க.வுக்கு 4 உறுப்பினர்கள் கிடைக்கச் செய்தவன் நான். 1998 இல் பா.ஜ.க. ஆட்சி அமையக் காரணமாக இருந்தவர் ஜெயலலிதா. போற்றுதலுக்குரிய ஜெயலலிதாவை பொதுவெளியில் எந்தவிதமான அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் அற்ற பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை திட்டமிட்ட வகையில் உள்நோக்கத்தோடு பொறுப்பற்ற முறையில் பேட்டி அளித்தது கண்டனத்துக்குரியது” என்று பழனிசாமி பேட்டி அளித்தார். பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும் போதுதான் இவை நடந்தன.

‘தவழ்ந்து காலில் விழுந்து பதவியைப் பிடித்தவர் பழனிசாமி’ என்று அண்ணாமலையே கிண்டல் அடித்தார். தான் சொன்னது சரிதான் என்றார் அண்ணாமலை. இவ்வளவு தான் பழனிசாமிக்கு பா.ஜ.க. தரப்பில் இருந்த மரியாதை ஆகும்.

2021 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இருந்தது. பின்னர் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது பா.ம.க. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணிக்குப் போய்விட்டது பா.ம.க. ‘அ.தி.மு.க. நாலாக உடைந்து விட்டது’ என்று பா.ம.க. விமர்சனம் செய்தது. அதனால் அவர்களோடு கூட்டணி இல்லை என்கிறது பா.ம.க. 2021ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் பா.ம.க.வை தன்னோடு வைத்துக் கொள்ள பழனிசாமி என்னென்னவோ எல்லாம் செய்தார். ஆனால் எதையும் மதிக்கவில்லை பா.ம.க. இவ்வளவுதான் பழனிசாமிக்கு இருந்த மரியாதை ஆகும்.

**இப்படி சொந்தக் கட்சியில் -**

**கூட்டணிக் கட்சிகளின் மத்தியில் -**

**பொதுமக்களிடத்தில் செல்லாக்காசு ஆகி வரும் பழனிசாமி வாய்க்கு வந்ததை வார்த்தை என்று உளறிக் கொண்டிருக்கிறார். தோல்வி நமைச்சல், புகைச்சலாக வெளிப்படுகிறது.**

## டெல்லியில் தொடர்ந்து அதிகரித்து வரும் காற்று மாசு!

*டெல்லி, அக். 26 - டெல்லியில் காற்று மாசு அதிகரிப்பால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சுவாச பிரச்சினைகளால் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 40 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இந்நிலையில், டெல்லியில் பொது மக்கள் தேவை இல்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது. இதனிடையே, டெல்லியில் அதிகரித்து வரும் காற்று மாசை குறைக்க செயற்கை மழை பெய்ய செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு அம்மாநில அரசு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக டெல்லி அமைச்சர் கோபால் ராய் ஒன்றிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்திர யாதவுக்கு கடிதம் எழுதி உள்ளார். அதில், காற்று மாசால் டெல்லி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதிலிருந்து மக்களை காக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.*



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2024) தலைமைச் செயலகத்தில், உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறுவதற்காக டென்மார்க்கின் கோபன்ஹேகனில் நடைபெறும் “அடுத்த தலைமுறை டிஜிட்டல் செயல் திட்டம் 2024ல்” இந்தியாவின் பிரதிநிதியாகச் செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வளர்ந்து வரும் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனமான ஸ்கிராப்பிஃபை எக்கோடெக் (Scrapify Ecotech) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் ம.பி. அழகு பாண்டிய ராஜா அவர்களை பாராட்டினார். இந்த நிகழ்வின்போது, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி வனிதா வேணுகோபால் ஆகியோர் உடனிருந்தனர்.

### டென்மார்க் - கோபன்ஹேகனில் ‘அடுத்த தலைமுறை செயல்திட்டம் - 2024’ மாநாடு!

### இந்தியாவின் பிரதிநிதியாகச் செல்லும்

# தமிழ்நாட்டின் அழகு பாண்டியராஜனுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

## தமிழ்நாடு அரசு அளிக்கும் ஊக்கத்திற்கு – அழகு பாண்டியராஜன் நன்றி!

**சென்னை, அக். 26 - டென்மார்க்கின் கோபன்ஹேகனில் நடைபெறும் “அடுத்த தலைமுறை டிஜிட்டல் செயல் திட்டம் 2024”ல் இந்தியாவின் பிரதிநிதியாகச் செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனமான ஸ்கிராப்பிஃபை ‘எக்கோடெக்’ நிறுவனத்தின் நிறுவனர் அழகு பாண்டிய ராஜாவை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார்.**

அதன் விவரம் வருமாறு:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2024) தலைமைச் செயலகத்தில், உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறுவதற்காக டென்மார்க்கின் கோபன்ஹேகனில் நடைபெறும் “அடுத்த தலைமுறை டிஜிட்டல் செயல் திட்டம் 2024”ல் இந்தியாவின் பிரதிநிதியாகச் செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வளர்ந்து வரும் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனமான ஸ்கிராப்பிஃபை எக்கோடெக் (Scrapify Ecotech) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் ம.பி. அழகு பாண்டிய ராஜாவைப் பாராட்டினார்.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தினால் (iTNT Hub) ஆதரவளிக்கப்பட்டு வரும் இந்த புத்தொழில் நிறுவனம், 2,000 விண்ணப்பங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உலகளாவிய 18 நிறுவனங்களில், இந்தியாவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து, ஸ்கிராப்பிஃபை எக்கோடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் அழகு பாண்டிய ராஜா, தங்கள் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட எக்கோஃபுளோட்டர் (EcoFloater) என்னும் நீர்நிலைகளைத் தூய்மை செய்யும் ஒரு புதுமையான நீர் ட்ரோன் இயந்திரம் செயலாற்றும் விதத்தை முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துரைத்தார். எக்கோஃபு ளோட்டர் மேம்பட்ட தொழில்நுட்ப உதவியுடன் எண்ணெய் கசிவுகளை திறம்பட சுத்தப்படுத்துதல், நெகிழி, ஆகாய தாமரை மற்றும் பிற மாசுகளை நீக்குதல் ஆகியவற்றுடன் நிகழ்நேர நீரின் தரத்தை கண்காணித்து, நீர்நிலைப் பராமரிப்பில் முக்கியப் பங்காற்றுகிறது.

அக்டோபர் 28 முதல் நவம்பர் 2, 2024 வரை டென்மார்க்கின் கோபன்ஹேகனில் நடைபெறும் டிஜிட்டல் தொழில்நுட்ப உச்சி மாநாடு 2024ன் உலகளாவிய இளைஞர் முயற்சியின் ஒரு பகுதியான “அடுத்த தலைமுறை டிஜிட்டல் நடவடிக்கை” நிகழ்ச்சியில் எக்கோஃபுளோட்டர் செயல்பாடுகள் குறித்து விளக்கப்படும்.

> **ஸ்கிராப்பிஃபை எக்கோடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் அழகு பாண்டிய ராஜா, தமிழ்நாடு அரசு அளித்த அங்கீகாரமும் ஊக்கமும் நாங்கள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கான மன உறுதியை அளித்துள்ளது என்றும், தங்களுக்கு தொடர்ந்து ஆதரவை வழங்கியதற்காக அரசிற்கும், தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்திற்கும் நன்றி என்றும் தெரிவித்துக் கொண்டார்.**

தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், ஸ்கிராப்பிஃபை எக்கோடெக் நிறுவனத்திற்கு, தயாரிப்பு மேம்பாட்டு ஆதரவு, ஆய்வக ஆதரவு, தொழில்நுட்ப வழிகாட்டல், மென்பொருள் தயாரிப்பு மேம்பாடு மற்றும் வணிகத்திற்கான வழிகாட்டுதல் மற்றும் முதலீட்டாளர் இணைப்பு போன்றவற்றில் ஆதரித்துள்ளது.

ஸ்கிராப்பிஃபை எக்கோடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் அழகு பாண்டிய ராஜா, தமிழ்நாடு அரசு அளித்த அங்கீகாரமும் ஊக்கமும் நாங்கள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கான மன உறுதியை அளித்துள்ளது என்றும், தங்களுக்கு தொடர்ந்து ஆதரவை வழங்கியதற்காக அரசிற்கும், தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்திற்கும் நன்றி என்றும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி வனிதா வேணுகோபால் ஆகியோர் உடனிருந்தனர்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# இராமேஸ்வரம் மீனவர்களை உடனே விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, அக். 26 - இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 16 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி 23.10.2024 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (24.10.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள், INDTN 10MM459 மற்றும் INDTN10 MM904 பதிவெண்கள் கொண்ட இரண்டு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் நேற்று (23.10.2024) கைது செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, தான் ஏற்கனவே குறிப்பிட்டது போல், இது போன்ற கைது சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து மீனவர்களின் குடும்பங்களுக்கு துயரத்தை ஏற்படுத்துவதை சுட்டிகாட்டியுள்ளார். இத்தகைய கைது நடவடிக்கைகள் தடையின்றி தொடர்வதுடன், அவை கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு இடையூறாக உள்ளதாகவும் தனது கடிதத்தில் வருத்தத்தோடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இதுபோன்று நம் நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 128 மீனவர்களையும், 199 மீன்பிடிப் படகுகளையும் விரைந்து விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், கூட்டு நடவடிக்கைக் குழுவினால் முன்மொழியப்பட்ட ஆலோசனைகள், மீனவர்கள் வாழ்வை சீர்குலைக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வினைக் கொண்டுவரும் என தான் நம்புவதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.